**26.07.2022**

**OS.No. 389/2019 PW : 1, திரு. சந்திரசேகரன்**

**6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

என்னிடம் காட்டப்படும் 16.03.1999 தேதியிட்ட ஜெராக்ஸ் கூரச்சீட்டில் உள்ள கையொப்பம் என் தந்தையின் கையொப்பம் இல்லை. என் தந்தை 49 செண்ட்-ஐ கிரையம் கொடுத்தார். 17.03.1999 தேதியிட்ட அந்த கிரைய ஆவணத்தில் நகல் பி.வா.சா.ஆ.3 ஆகும். ஆனால் அதில் சொல்லப்பட்டுள்ள விவரவங்கள் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் என் தந்தைக்கு டி ஷெட்டியூலில் உள்ள சொத்துக்கள் கிடைத்ததாக எழுதப்பட்டுள்ளது. ஆனால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பாகப்பிரிவினை எதுவும் நடக்கவில்லை. நான் தற்போது இருக்கும் வீடு என் தாத்தாவின் சுயசம்பாத்திய சொத்தாகும். 2013ல் என் தந்தை எங்களுக்கு எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து என் பெரியப்பா முனுசாமி திருத்தணி நீதிமன்றத்தில் அ.வ.எண். 21/2014 என்ற ஒரு வழக்கை தாக்கல் செய்தார். 13.12.2014ல் என் தந்தை காலமாகிவிட்டார். நான் தற்போது இருக்கும் இடத்தை ஆக்கிரமித்து விட்டதாக முனுசாமி வழக்கு தாக்கல் செய்தார். ஆனால் நான் ஆக்கிரமிக்கவிலல்லை. முனுசாமி எங்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் வேலி போட்டிருக்கும் இடம் என் தந்தை எனக்கு செட்டில்மெண்ட் மூலம் கொடுத்தாக நான் 6ம் பிரதிவாதியிடம் சொல்லவில்லை. என் சின்ன தாத்தாவும், பெரிய தாத்தாவும் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள்

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

என்றால் சரியல்ல. என் சின்ன தாத்தா சர்வேஎண் 114/19ஏ-ல் தனியாக குடியிருப்பதாக இவ்வழக்கில் சொல்லியிருக்கிறேன். என் தாத்தா அவரை மேற்கூறிய சர்வே எண்ணில் குடியிருக்க அனுமதித்தார். அதற்கு முன்பு என் சின்ன தாத்தா எங்கே குடியிருந்தார் என்று எனக்கு தெரியாது. என் தாத்தா வாய்மொழியாக அனுமதி கொடுத்தது பற்றி காவல் நிலையத்திலோ திருத்தணி நீதிமன்றத்திலோ நான் சொல்லவில்லை. இவ்வழக்கில் 1வது அயிட்ட சொத்தை பற்றி பாகப்பிரிவினை மற்றும் 2வது அயிட்ட சொத்தை பொறுத்து உறுத்துகட்டளை பரிகாரம் கோரி இருக்கிறோம். நான்கு பங்கில் ஒரு பங்கை கேட்டிருக்கிறோம். 6½ சென்ட இடத்தில் வீடுகட்ட வேண்டும் என்று பிராதில் கூறியிருக்கிறேன். ஆனால் வீடுகட்ட நிலம் 1½ சென்ட் இருக்கும். மீதமுள்ள இடம் மரம், செடிகள், மாட்டுதொழுவமாக இருக்கிறது. 2001 பாக ஆவணத்தில் என் சின்ன தாத்தாவின் 3 பெண் குழந்தைகள் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் அந்த ஆவணத்தில் சேர்க்கவில்லை அதுபற்றி எனக்கு தெரியாது. மொத்த சொத்தில் என் தாத்தாவின் பங்கை ஒப்பிடும் போது என் சின்ன தாத்தாவிற்கு ஐந்தில் ஒரு பங்கு கூட வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தா பெயரில் பத்திரம் இருந்ததால் பட்டா மாற்றம் செய்ய எங்களிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றும் நான் 6ம் பிரதிவாதியிடம் ரூ.2,00,000/- கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் முதல் விசாரணையில் 16வது பாராவில் செல்லியுள்ள வழக்கானது திருத்தணி

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

நீதிமன்றத்தில் உள்ள வழக்காகும். 2011ம் வருட பாகப்பிரிவினை ஆவணத்தை பற்றி 11 வருடமாக நாங்கள் கேள்வி எழுப்பி வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அந்த பாகஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் இரண்டு ஆவணங்களை தவிர மற்ற ஆவணங்கள் 2013க்கு பின்னர் ஏற்பட்ட ஆவணங்கள் தான். 41 சென்ட்க்கு என் அப்பா பெயரிலோ எங்கள் பெயரிலோ பட்டா இல்லை. அது என் தாத்தாவின் கிரைய சொத்தாகும். எங்களுக்கு என் தந்தை செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுக்கும்போது அவருக்கு சர்க்கரை வியாதி ஏற்பட்டு கால்விரல்கள் எடுக்கப்பட்டு மனநிலை சரியல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. 2001ல் எனக்கு 12, 13 வயது இருக்கும். என் தாத்தாவும் அவரது சகோதரர்களும் கூட்டாகதான் சொத்துக்களை வாங்கினார்கள் என்றும் ஆகவே அவர் அவர்கள் அனுபவிக்கும் சொத்துக்கள் அவர் அவர்கள் பாகசொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. பாகம் நடக்காதபோது பூர்வீக சொத்தை என் தந்தை மட்டும் பி.வா.சா.ஆ.3 மூலம் எப்படி கிரையம் கொடுத்தார் என்று கேட்டால் என் பெரியப்பா ஆட்சேபனை கொடுத்ததால் கிரையம் கொடுத்தார். அதே போன்று 2001ல் பாகப்பிரிவினை பத்திரம் எழுதும்போது என் தந்தை ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால் அந்த பத்திரம் எழுதியது என் தந்தைக்கு தெரியாது.

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

I Additional District and Sessions Judge,
Tiruvallur.